ரணவிறு சேவா அதிகாரசபை - 2010

-----------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

1.1 அபிப்பிராயம்

---------------------

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ரணவிறு சேவா அதிகார சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரணவிறு சேவா அதிகாரசபையின் நிலைவரத்தையும், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனது அபிப்பிராயமாகும்.

1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

-----------------------------------------------------------------------------

2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் வரைவு மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2011 மே 04 ஆந் திகதியன்றே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சலுகைக் கடன் செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 116,160 க்கான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 205,230 க்கான இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் 2010 ஆம் ஆண்டில் தேய்மானத்திற்குள்ளாகவில்லை. அதற்கமைய, ஆண்டிற்கான தேய்மானமும் தேய்மான நிதியேற்பாடும் ரூபா 48,209 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபைக்கு ஊனமுற்ற போர் வீரர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்கென நன்கொடையாகப் பெறப்படும் பொருட்களது பெறுமதியை சந்தைப் பெறுமதிக்கேற்பத் தீர்மானித்துக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நிலையான வைப்புகளுக்குரிய மீளாய்வாண்டின் வட்டி வருமானமும் பெறவேண்டிய வட்டி வருமானமும் முறையே ரூபா 260,556 ஆகவும் ரூபா 30,822 ஆகவும் குறைவாகவும் தடுத்து வைத்த வரியாகிய ரூபா. 22,899 அதிகமாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரசபையின் 4 செயற்திட்டங்களுக்குரிய காசு மீதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 12,610,069 ஆகும். குறித்த காசேட்டின் பிரகாரம் அத்தொகை ரூபா 9,100,378 ஆகும்.

(உ) கல்விச் செயற்திட்டத்திற்குரிய சம்பளமும் வேதனமுமாக ஆரம்பச் சம்பளத்திற்கு பதிலாக மொத்தச் சம்பளத்தையும் கணக்கிலிட்டமையால் சம்பளம் மற்றும் வேதனங்களது செலவினமானது ரூபா. 131,147 குறைத்துக் காட்டப்பட்டும் ஊழியர் சேமலாப நிதியச் செலவினமாக அதிகார சபையின் உதவு தொகையை மாத்திரமே காட்டியமையால் அச்செலவினம் நிதிக்கூற்றுக்களில் ரூபா. 131,147 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் கல்விக் கடனாக ரூபா 33,000, ஒரு வைப்பாகிய ரூபா 10,000, பெறவேண்டிய ஏனைய மீதியாகிய ரூபா 79,948 என்பன ஓராண்டிற்கும் மேலாகக் காட்டப்பட்டவாறிருந்தன. எனினும், அவற்றை அறவிடுவதில் கவனஞ் செலுத்தப்படவில்லை.

#### (ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 536,662 கூட்டுத்தொகையானது ஓராண்டிற்கும் மேலாக நிலவி வருவனவாகும். எனினும், அதனைத் தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### 1.2.4 இனங்காணப்படாத மீதிகள்

சலுகைக் கடன் செயற்திட்டம் மற்றும் கல்விச் செயற்திட்டம் என்பவற்றிற்குரிய நேரடியாக வங்கியில் வைப்பிலிடப்பட்ட தொகை முறையே ரூபா 33,211, ஆகவும் ரூபா 146,809 ஆகவுமாகக் காணப்பட்டது.

### 1.2.5 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றின்மை

சொத்துக்களுக்கான பின்வரும் கடிதங்களும் பதிவேடுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(அ) அதிகாரசபையின் செயற்திட்டங்களுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடுகள்

(ஆ) அதிகாரசபையின் சகல வங்கிக் கணக்குகள், நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்பு வைப்புகள் என்பவற்றிற்குரிய மீதிகளை நேரடியாக உறுதிப்படுத்தும் கடிதங்கள்.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| **(அ) நிதிப் பிரமாணம்** | |
| நி.பி 756 | அதிகாரசபைக்குரிய நிலையான சொத்துக்களும் கையிருப்பும் வருடாந்தப் பொருட் கணிப்புச் சபையால் சரி, பிழை பார்க்கப்பட வில்லை |
| **(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| **2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்கம்** | |
| I பிரிவு 6.5.1 | மீளாய்வாண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| II பிரிவு 6.5.3 | நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் பாரளுமன்றத்தில் முன்வைக்கப்பட |

வேண்டும். எனினும், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்த அறிக்கைகளையும் நிதிக் கூற்றுக்களையும் பாரளுமன்றத்தில் முன்வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கம் 2.11 ஆம் பந்தி | ஆறு மாதத்திற்கொருமுறை வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்பட வேண்டுமாயினும், சுற்றறிக்கைப் பிரகாரம் அதிகாரசபையின் வாகனங்களுக்குரிய பரிசீலினை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற சபையின் நிதிசார் விளைவுகள் அரசாங்க உதவு தொகையாகிய ரூபா. 19,578,342 ஐக் கணக்கிலெடுத்ததன் பின்னர் ரூபா. 9.711,073 மிகையாகியது. இதற்கெதிராக முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவுகள் அரசாங்க உதவு தொகையாகிய ரூபா 24,965,725 ஐக் கணக்கிலெடுத்ததன் பின்னர் ரூபா. 17,905,712 பற்றாக்குறை ஆகியது. இதற்கமைய, மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 27,616,785 அதிகரிப்பு தென்படுகின்றது. செயற்திட்ட தொழிற்பாட்டுச் செலவினம், பராமரிப்புச் செலவினம் மற்றும் நிதிசார் செலவினம் என்பன முன்னைய ஆண்டைவிட மீளாய்வாண்டில் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்தமையே இதற்கான காரணமாகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 2.2.1 செயலாற்றல்

------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கென திறைசேரியிடமிருந்து அதிகாரசபை பெற்ற மூலதன மானியத்தில் ரூபா. 15,985,445 தொகையானது 2009 டிசெம்பர் 31 அளவிலும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 2010 மே மாதத்தில் ரூபா. 10,854,964 திறைசேரியால் மீளப்பெறப்பட்டுமிருந்தது.

(ஆ) செயற்திட்ட நோக்கங்களை ஈடேற்றுவதற்காக 2010 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 278,616,983 ஆகும். இதில் ஏறக்குறைய 25 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா. 70,636,205 குறித்த விடயத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை. வீடமைப்பு மற்றும் காணிச் செயற்திட்டத்திற்கு ஒதுக்கிய தொகையில் 57% மற்றும் ஊனமுற்ற ரணவிறு கிராமச் செயற்திட்டம் என்பவற்றிற்கு ஒதுக்கிய தொகையில் 49% செலவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் சங்சத ரணவிறு கிராமம் மற்றும் சலுகைக்கடன் ஆகிய செயற்திட்டங்களுக்குரிய 4 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட வில்லை. இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 16,670,000 ஆகும்.

### 2.2.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

--------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் பிரதேச செயலகத்துடன் இணைந்து போர் வீரர்களுக்கு விநியோகிப்பதற்காக நடவடிக்கை எடுத்தவாறிருக்கும் 20 எண்ணிக்கையிலான காணிகளில் மீளாய்வாண்டு முடிவில் அவர்களுக்கிடையே எண்ணிக்கையிலான 6 காணிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்த மேலும், தனிப்பட்ட நன்கொடையாளர்கள் அதிகாரசபைக்கு வழங்கிய 4 காணிகள் அடங்கியதுடன் அக் காணிகள் உரிய நன்கொடையாளர்களது எண்ணப்படி போர்வீரர்களுக்குப் பயனுள்ளவாறு பயன்படுத்தப்படுவதற்கு அதிகாரசபையால் இயலாது போயிற்று.

(ஆ) அதிகாரசபை பராமரிக்கும் ரணவிரு கிராமங்கள் 39 ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. இக்குறைபாடுகள் சம்பந்தமாக அதிகாரசபை செலுத்தும் கவனம் நலிவடைந்து மட்டத்திலேயே இருந்தது.

(i) வாழ்வதற்கு அவசியப்படும் நீர், வீதிகள், போக்குவரத்து வசதிகள் மின்சாரம் போன்ற தேவைப்பாடுகள் 26 கிராமங்களில் முழுமை பெறாத நிலையில் இருந்தன.

(ii) பதினெட்டுக் கிராமங்களில் குடியிருப்பதற்கென வருகை தந்திருந்த போர் வீரர்களது குடும்பங்களின் எண்ணிக்கை குடியிருப்பதற்கு அமர்த்தப்படக்கூடிய எண்ணிக்கையை விடக் குறைவான மட்டத்தில் இருந்தது.

(iiii) அக்கிராமங்களது வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் முறையான திட்டமெதுவும் இருக்கவில்லை.

(iv) போர் வீரர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் வெளிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட அல்லது விற்பனை செய்யக்கூடியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(v) கிராமக் காணிகளது உரித்துறுதிகளை வழங்குவதற்கான திட்டமிடப்பட்ட நடைமுறை இருக்கவில்லை.

(vi) கிராமத்தவர்களது பொருளாதார மற்றும் மனோரீதியாக வலுப்படுத்துவதற்காக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) இப்பகமுவ போர் வீரர்களது கிராமத்தில் ஊனமுற்ற படைவீரர் சுயதொழில் வேலை வாய்ப்பில் ஈடுபடும் நோக்கத்துடன் புடவைக் கைத்தொழில் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2007 ஜுன் 14 ஆந் திகதியன்று ரூபா. 510,607 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன்பொருட்டு 2008 மார்ச் 19, 2009 ஜுலை 10 ஆகிய திகதிகளில் 153,180 சதவீதம் ரூபா. 306,360 விடுவிக்கப்பட்டிருந்தது. 2007 முதல் இற்றைவரை 4 ஆண்டுகள்

கடந்துவிட்டபோதும் அதிகாரசபையால் குறித்த நோக்கத்தை ஈடேற்றமுடியவில்லை.

(ஈ) முன்பாடசாலைக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக கெக்கிராவை படைவீரர் நலன்புரிச் சங்கத்தால் 2008 நவெம்பர் 5 ஆந் திகதியன்று ரூபா. 499,995 க்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2008 திசெம்பர் 15, 2009 மே 25, 2009 ஒக்டோபர் 16 ஆகிய திகதிகளில் ரூபா. 399,996 கூட்டுத்தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட நிலையில் குறித்த விடயத்தை அதிகார சபையால் ஈடேற்ற முடியாதிருந்தது.

### 2.2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை படைவீரர்களின் பராமரிப்பில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்கும் அவசர இடர் உதவி மற்றும் கடன் உதவி ஆகியவற்றுடன் தொடர்புடைய காசோலைகள் நலன்பெறுநர்களுக்குத் துரிதமாக வழங்கப்படாது 2 முதல் 6 மாத காலமாக மாகாண உத்தியோகத்தர்கள் வசமிருந்து பின்னர் காலநீடிப்பு வழங்கப்பட்டமையால் படைவீரர்களது நலன்புரிச்சேவை முறையாக நடைபெறாமை தென்பட்டது.

(ஆ) செயற்திட்டங்களின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கப்படும் போது வழங்கப்படக்கூடிய அதிகூடிய வரம்பு அதிகாரசபையால் தீர்மானிக்கப்படவில்லை. அவ்வாறே, 2010 ஆம் ஆண்டின் போது 8 உத்தியோகத்தர்கள் பெற்ற முற்பணம் ரூபா. 689,921 ஆகும். அதில் ரூபா. 131,139 எஞ்சிய தொகையாக அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதும் குறித்த ரூபா 558,782க்கான செலவினம் உறுதி செய்யப்படுவதற்கான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்தொகை தீர்த்து வைக்கப்படாத முற்பணமாகக் காட்டப்பட்டிருந்தது. இது அரச நிதியினை முறையற்ற பயன்பாடாகும்.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கின் செலவு மீதி ரூபா. 6,100,902 ஆகும். அம்மீதியினுள்ளே:-

- முன்னைய ஆண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவினமாக ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி, ஊனமுற்றோர் மற்றும் ‘‘சங்சத’’ செயற்திட்டங்களுடன் தொடர்புடையவை முறையே ரூபா. 200,000, ரூபா. 3,524,247, ரூபா. 3,204,220 என்பனவும் உள்ளடங்கியிருந்தன.

- முன்னைய ஆண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டியதாகக் கூடுதலாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் அக்கணக்குகளில் எஞ்சிய மீதியாகிய ஊனமுற்ற மற்றும் சங்சத செயற்திட்டங்களுக்கான ரூபா. 959,000, ரூபா. 600 என்பனவும் ஆகும்.

மேலே குறிப்பிட்டவாறு, முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் மேற்கொண்ட சீராக்கலுக்குரிய நாட்குறிப்பும் தயாரிக்கப்படவில்லை. அதிகாரசபையின் நிதிசார் கட்டுப்பாட்டிலும் மீளாய்விலும் நிலவும் நலிவுகளால் மேற்குறிப்பிட்டவாறு அதிகளவில் சீராக்கல் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளமை சீராக்கல்களின் தன்மைகளை உற்றுநோக்குகையில் தெளிவாகின்றது.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

அதிகாரசபைக்காக 2011 தொடக்கம் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கான கூட்டுத் திட்டமென்றினைத் தயாரிப்பதற்காக வெளி நிறுவனம் ஒன்றின் உசாத்துணையும் மூலவள பங்களிப்பும் பெறப்பட்டு செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதன் பொருட்டு ரூபா. 521,382 செலவாகியிருந்த போதும், அந்த கூட்டுத் திட்டத்தையும் சுற்றறிக்கைப் பிரகாரம் அமைப்பதற்கு அதிகாரசபையால் இயலாது போயிற்று.

### 2.2.5 ஆளணி முகாமைத்துவம்

---

வெற்றிடங்கள் நிலவும் உயர் பதவிகளில் அவற்றை நிரப்புவதற்கும் போதியளவு ஆளணியினரை அங்கீகரிப்பதற்கும் இதுவரை அதிகாரசபையால் இயலாது போயிற்று. உயர் பதவிகளில் தற்காலிக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சட்டத்துறை உத்தியோகத்தர் மற்றும் உளச்சார்பு சமூகவியல் வல்லுனர் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கு 2003 ஆம் ஆண்டு முதல் இயலாது போயிற்று. ஊழியர் பற்றாக்குறையின் பேரில் ஒப்பந்த

அடிப்படையில் பயிலுநர்களை ஆட்சேர்த்து ஊழியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டிருந்தது. பொலிஸ், மற்றும் முப்படையில் இருந்தும் ஊழியர்களை அதிகாரசபை பெற்றிருந்த போதும் அவர்கள் பயனுள்ளவாறு தேவைக்கேற்ப பணியில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கூட்டுத் திட்டம்

----------------------------

2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அது 2003 ஜூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் அமையாததுடன் 2010-2012 காலப்பகுதிக்கென அது நாளதுவரையாக்கப்படாதுமிருந்தது.

### 2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிடையே குறிப்பித்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தபடவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) செயற்திட்டங்களைக் செயற்படுத்தல்
(இ) ஆளணி முகாமைத்துவம்
(ஈ) பதிவேடுகளைப் பேணுதல்
(உ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(எ) பொது நிர்வாகம்